முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1182

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.12.2022, சனிக்கிழமை

1. பிரணவ குடில் படைத்த குருராஜனே
   பிரணவ சித்திமிகு ஆறுமுக அரங்கனே
   சரவணச்சுடராகி ஆறுமுகன் யான்
   சாற்றிடுவேன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சுபகிருது சிலையின் திங்கள்
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 09 ம் நாள் 24.12.2022, சனிக்கிழமை)
   அருளுவேன் அரங்கன் உமக்கு பலம் கூட
   வரமென என்சக்தி நித்தம் நித்தம்
   வல்லமை கூட்டி உந்தனுக்கு ஆற்றலாய் இறங்க
3. இறங்கவே இந்த கலியுகத்தில்
   இனிதே அரங்கன் ஞானமே வெற்றி கொள்ளும்
   மாற்றம் தந்து கலியுகத்தையே
   மகத்துவம் மிக்க ஞான யுகமாக மாற்றும்
4. மாற்றும் சக்திமிகு அரங்கனுக்கு மகான் சுப்ரமணியர் யானும் ஆற்றல்கூட்டி
   உற்றதொரு உணவின் வழியும் தவபலத்தின் வழியும்
   உயர்வான அரங்கன் செய்யும் தர்மத்தின் வழியும்
   உரைத்திடுவேன் உலகமெங்கும் சக்தியாக நிரம்பி
5. நிரம்பி அற்புதத்தை நடத்தி வர
   நிலவுலகில் அரங்கன் சீடர்களென
   கோலமதாய் அடையாளம் கொண்ட மக்களெல்லாம்
   குவலயத்தில் ஆறுமுகன் என்னாசி பெற்று
6. பெற்றுமே அரங்கன் அவதார நோக்கமான
   பேருலக மாற்ற சேவைகளில்
   ஆற்றல்பட தொண்டர்களாக இறங்கி
   ஆறுமுகன் என் துணையோடு அவர்களெல்லாம்
7. அழியாமை கண்டு சிறக்க நேரும்
   அற்புதத்தை அரங்கன் வழி யான் நடத்திவர
   ஏற்புகொண்டு உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி
   வந்து இணைந்தால் போதும் இந்த உலகமாற்றம் சடுதி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–